பேரூரில் ரூ.6 ஆயிரம் கோடியில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டம்: அமைச்சர் கே.என்.நேரு தகவல்

சென்னை, ஆக.24

பேரூரில் ரூ.6 ஆயிரம் கோடியில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன என்று அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

சென்னை மேற்கு சைதாப்பேட்டையில் புதிய கழிவுநீர் உந்து நிலையம் அமைப்பதற்கான பணியை அமைச்சர்கள் கே.என்.நேரு, மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தனர். இந்த நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், சென்னைப் பெருநகர் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குனர் ஆர். கிர்லோஷ் குமார், செயல் இயக்குனர் ராஜகோபால் சுன்கரா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் அமைச்சர் கே.என்.நேரு கூறியதாவது:

சென்னையில் குடிநீர் வாரியத்தின் சார்பில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தொழிற்சாலை பயன்பாட்டுக்கான நீரை உற்பத்தி செய்வதற்கான சுத்திகரிப்பு நிலையங்கள் ரூ.817.32 கோடி மதிப்பீட்டில் கொடுங்கையூர், கோயம்பேட்டில் அமைக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் புதிதாக இணைக்கப்பட்ட 17 பகுதிகளில் ரூ.754.51 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 8 பகுதிகளில் ரூ.525.77 கோடியில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் நடந்துவருகின்றன.

சென்னை பெருநகர மக்களுக்கு தேவையான அளவு குடிநீர் வழங்கும்பொருட்டு ரூ.1,070 கோடி மதிப்பீட்டில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் மீஞ்சூர், நெம்மேலியில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. கூடுதலாக, பேரூரில் ரூ.6,078.40 கோடி மதிப்பீட்டில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

சென்னை குடிநீர் வாரியத்தின் மூலம் ரூ.877.37 கோடியில் கொடுங்கையூர், கோயம்பேடு, நெசப்பாக்கம், சோழிங்கநல்லூர் மற்றும் பெருங்குடியில் அமைந்துள்ள 12 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை மேம்படுத்தும் பணி நடக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

நுங்கம்பாக்கம் நடைமேம்பாலம் திறப்பு

அதனைத்தொடர்ந்து சென்னை நுங்கம்பாக்கம் சுரங்கபாதையின் குறுக்கே ரூ.6.17 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட நடைமேம்பாலம் மற்றும் அண்ணாநகரில் உள்ள கும்மாளம்மன் கோவில் தெருவில் ரூ.1.23 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமுதாய நலக்கூடம் ஆகியவற்றை அமைச்சர் கே.என். நேரு திறந்து வைத்தார்.

சென்னை மேற்கு சைதாப்பேட்டையில் புதிய கழிவுநீர் உந்து நிலையம் அமைப்பதற்கான பணியை அமைச்சர்கள் கே.என்.நேரு, மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தனர்.

30ந்தேதி அண்ணா பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர்கள் மாநாடு: மு.க.ஸ்டாலின் தலைமையில் நடக்கிறது

சென்னை, ஆக.24

சென்னையில் வருகிற 30ந்தேதி பல்கலைக்கழக துணைவேந்தர்கள் மாநாடு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது.

மு.க.ஸ்டாலின் தலைமையில், பல்கலைக்கழக துணை வேந்தர்கள் மாநாடு கடந்த 17ந்தேதி சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறுவதாக இருந்தது.

இதுகுறித்து உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி அறிவிப்பை வெளியிட்டு இருந்தார். ஆனால் முதலமைச்சரின் டெல்லி பயணம் காரணமாக, அந்த மாநாடு ஒத்திவைக்கப்பட்டது. இதற்கிடையே வருகிற 30ந்தேதி இந்த மாநாடு, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறும் என்று தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன. இக்கூட்டத்தில் அனைத்து பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள், உயர் கல்வித்துறை அதிகாரிகள், மாநில கல்வி கொள்கையை வகுக்கக்கூடிய குழுவின் தலைவர், உறுப்பினர்கள் உள்பட பலர் கலந்துகொள்கின்றனர்.

உயர்கல்வித்துறை செயல்பாடுகள், புதிய கல்வி கொள்கை, உயர்கல்வித் துறையின் தரத்தை உயர்த்துவது, பாடத்திட்டங்களை மேம்படுத்துவது, மாநில கல்வி கொள்கை உள்பட பல்வேறு அம்சங்கள் குறித்து ஆலோசனை நடத்துகிறார். சில இடங்களில் பாடத்திட்டங்களில் பிரச்சினை உள்ளது.

தமிழ், ஆங்கிலம் மொழிப்படிப்பில் என்னென்ன பிரச்சினைகள் உள்ளன? என்பது பற்றி இந்த மாநாட்டில் முதலமைச்சர் முன்பு பேசப்படும். மொழிப்பாடங்கள் அனைத்து பல்கலைக்கழகத்திலும் ஒரே மாதிரியாக, இருப்பது குறித்தும், அதை செயல்முறைபடுத்துவது குறித்தும் முதலமைச்சர் தலைமையிலான இந்த மாநாட்டில் ஆலோசிக்கப்பட உள்ளது.

மேலும், நான் முதல்வன் திட்டத்தை அனைத்து பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளிலும், என்ஜினீயரிங் கல்லூரிகளிலும் செயல்படுத்துவது தொடர்பாக விவாதித்து முடிவு எடுக்கப்படும் என்று தெரிகிறது.

JMJ பின்டெக் லிமிடெட்

(முன்னர் மீனாட்சி எண்டர்பிரைசஸ் லிமிடெட்)
CIN: L51102TN1982PLC009711
எண். 17/9, லக்மிபுரம் மெயின் தெரு, லாயிட்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை 600014.
EMAIL: investor@melnbfc.com Website: www.melnbfc.com

39வது வருடாந்திர பொதுக்கூட்டம், வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு மற்றும் புத்தகம் மூடல் அறிவிப்பு

செக்யூரிடிஸ் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா ('செபி') மற்றும் இந்திய அரசின் கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகத்தினால் ('எம்சிஏ') வழங்கப்பட்ட பொது சுற்றறிக்கை எண்கள். 20/2020, 14/2020, 17/2020 மற்றும் இதர பொருந்தக்கூடிய விதிகளின்படி, வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்களை செயல்படுத்த கம்பெனி உறுப்பினர்களின் 39வது வருடாந்திர பொதுக்கூட்டம் 19 செப்டம்பர், 2022 திங்கட்கிழமை அன்று மாலை 3.00 மணிக்கு காணொளி காட்சி/இதர ஒளி ஒலி சாதனங்கள் மூலமாக நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்க மற்றும் காகித நகல்களை அனுப்புவதில் உள்ள சிரமங்கள் காரணமாக, வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் 2021-22 நிதியாண்டுக்கான ஆண்டு அறிக்கையின் மின்னணு நகல்கள் கம்பெனி/டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்த அனைத்து உறுப்பினர்களுக்கும் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் அனுப்பி வைக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். 39வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் 2021-22 நிதியாண்டுக்கான ஆண்டு அறிக்கை ஆகியவை கம்பெனியின் வலைதளம் www.melnbfc.com, ஸ்டாக் எக்சேஞ் வலைதளம் மற்றும் டெபாசிட்டரி வலைதளத்தில் உள்ளது. இந்த ஆவணங்களை www.melnbfc.com மற்றும் பம்பாய் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

டிமெட்டீரியலைஸ்ட் முறையில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்களைத் தங்கள் டெபாசிட்டரி பங்கேற்பாளர்கள் மூலம் தொடர்புடைய டெபாசிட்டரியில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். காகித முறையில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்களை கம்பெனியின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் M/s பூர்வா ஷரிஜிஸ்ட்ரி (இந்தியா) பிரைவேட் லிமிடெட்டிடம் (இனி ''ஆர்டிஏ'' என்று குறிப்பிடப்படும்'') வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களிலும் அதன் உறுப்பினர்கள் வாக்களிக்க தொலைதூர மற்றும் மின்னணு வாக்குப்பதிவு வசதியை நிறுவனம் வழங்கும். கூடுதலாக, வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது மின்னணு வாக்குப்பதிவு முறை மூலம் வாக்களிக்கும் வசதியை கம்பெனி வழங்குகிறது. விரிவான நடைமுறை வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறுவதையொட்டி கம்பெனியின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்ற புத்தகங்கள் செவ்வாய்க்கிழமை, 13 செப்டம்பர், 2022 முதல் திங்கட்கிழமை, 19 செப்டம்பர் 2022 முடிய (இரு நாட்களும் உள்பட) மூடப்பட்டிருக்கும் என்று கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 91 விதிகளின்படி மேலும் அறிவிக்கப்படுகிறது.

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 44, கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 108 மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன் விதி 20ன்படி, உறுப்பினர்களுக்கு தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதியை கம்பெனி அளிக்கிறது. கட் ஆப் தேதியான திங்கட்கிழமை,12 செப்டம்பர் 2022 அன்று காகித வடிவில் அல்லது டிமெட்டீரியலைஸ்ட் வடிவில் பங்குகளை வைத்துள்ளவர்கள், வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்திலிருந்து வேறு இடத்தில் இருந்தாலும் (தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு) சிடிஎஸ்எல்-ல் உள்ள மின்னணு வாக்குப்பதிவு முறை மூலம் 39வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்கள் மீது மின்னணு முறையில் தங்கள் வாக்குகளை அளிக்கலாம்.

உறுப்பினர்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பதாவது:

i. 39வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்கள் மின்னணு வாக்குப்பதிவின் மூலம் செயல்படுத்தப்படும்.

ii. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு 16 செப்டம்பர் 2022 அன்று (காலை 9.00 மணி) தொடங்கும்.

iii. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு 18 செப்டம்பர் 2022 அன்று (மாலை 5.00 மணி) முடிவடைகிறது.

iv. மின்னணு வாக்குப்பதிவிற்கு தகுதியானவர்களை நிர்ணயிக்கும் கட் ஆப் தேதி வியாழக்கிழமை, 15 செப்டம்பர் 2022. வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு அனுப்பிய பின்னர் கம்பெனியின் பங்குகளை பெற்று உறுப்பினர் ஆனவர் மற்றும் கட் ஆப் தேதியான திங்கட்கிழமை, 12 செப்டம்பர் 2022 அன்று பங்குகளை வைத்துள்ளவர் purvashr@mtnl.net.inக்கு மின்னஞ்சல் அனுப்பி லாகின் ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக் கொள்ளலாம். எனினும், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவிற்காக ஏற்கனவே பதிவு செய்த நபர் அவரது தற்போதைய உபயோக ஐடி மற்றும் பாஸ்வேர்டை வாக்களிக்க பயன்படுத்தலாம்.

v. கம்பெனி/டெபாசிட்டரிகளில் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாமல் காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் கீழ்க்கண்ட தேவையான விவரங்களை அளித்து ஆண்டறிக்கை, மின்னணு வாக்குப்பதிவிற்கான லாகின் மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக் கொள்ளலாம்.

i) காகித வடிவில் வைத்துள்ள பங்குதாரர்களுக்கு: தயவுசெய்து போலியோ எண், பங்குதாரரின் பெயர், பங்கு சான்றிதழின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் (முன் மற்றும் பின்), பான் (பான் கார்டின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்), ஆதார் (ஆதார் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல் அட்டை) போன்ற தேவையான தகவல்களை மின்னஞ்சல் மூலம் கம்பெனிக்கு investor@melnbfc.com அல்லது பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் purvashr@mtnl.net.inக்கு அளிக்க வேண்டும்.

ii) டிமேட் பங்குதாரர்களுக்கு: தயவுசெய்து டிமேட் கணக்கு விவரங்களை (CDSL-16-digit beneficiary ID or NSDL-16-digit DPID + CLID), பெயர், கிளையன்ட் மாஸ்டர் அல்லது ஒருங்கிணைந்த கணக்கு அறிக்கையின் நகல், பான் (பான் கார்டின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்), ஆதார் (ஆதார் அட்டையின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்) ஆகியவற்றை கம்பெனிக்கு investor@melnbfc.comக்கு அல்லது உங்கள் அந்தந்த டெபாசிட்டரி பங்கேற்பாளருக்கு (DP) அளிக்க வேண்டும்.

எனினும், மின்னணு வாக்குப்பதிவிற்காக ஏற்கனவே பதிவு செய்த நபர் அவரது தற்போதைய உபயோக ஐடி மற்றும் பாஸ்வேர்டை வாக்களிக்க பயன்படுத்தலாம்.

வருடாந்திர பொதுக்கூட்டத்தில் ஆஜராவது மற்றும் சிடிஎஸ்எல் மின்-வாக்களிப்பு முறையிலிருந்து மின் வாக்கெடுப்பில் கலந்து கொள்வது குறித்து உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் அல்லது சிக்கல்கள் இருந்தால், helpdesk.evoting@cdslindia.com க்கு மின்னஞ்சல் எழுதலாம்.

vi. வாக்களிக்க தகுதி உள்ள உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியது.

எ) ஞாயிற்றுக்கிழமை, 18 செப்டம்பர் 2022 அன்று மாலை 5.00 மணிக்கு பின்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முடக்கப்படும். ஒரு தீர்மானத்தின் மீது உறுப்பினர் வாக்களித்து விட்டால் பின்னர் அதனை மாற்ற அனுமதிக்கப்பட மாட்டார்.

பி) வருடாந்திர பொதுக்கூட்டத்திற்கு முன்னதாக தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை கிடையாது மற்றும்

சி) கட் ஆப் தேதியன்று உறுப்பினர்கள் பதிவேடு அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளரின் பதிவேட்டில் பதிவு செய்த ஒரு நபர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதியைப் பெற தகுதியுடையவர் ஆவார்.

டி) ஒரு உறுப்பினர் இரு முறைகளிலும் வாக்களித்தால், மின்னணு வாக்குப்பதிவின் மூலம் செய்யப்படும் வாக்களிப்பு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது அளித்த மின்வாக்களிப்பு செல்லாது என்று கருதப்படும்.

vii) வாக்குப்பதிவு மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு நடைமுறைகள் நேர்மையாகவும் வெளிப்படையான முறையிலும் நடைபெறுவதை ஆராய Ms. லட்சுமி சுப்ரமணியன், சீனியர் பார்ட்னர், M/s. லட்சுமி சுப்ரமணியன் அண்ட் அசோசியேட்ஸ், பிராக்டிசிங் கம்பெனி செயலாளர்கள், அலுவலகம், ''முருகேச நாயக்கர் காம்ப்ளக்ஸ்'', எண். 81, கிரீம்ஸ் ரோடு, சென்னை 600 006 அவர்களை ஆராய்வாளராக கம்பெனி நியமனம் செய்துள்ளது.

viii) மின்னணு வாக்குப்பதிவு முடிவுகளை கம்பெனி தனது வலைதளம் www.melnbfc.com மற்றும் www.bseindia.comல் பங்குச் சந்தைக்கும் அறிவிக்கும்.

குழுவின் ஆணைப்படி
JMJ பின்டெக் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/- திரு. ஜோஜு மடத்தும்பாடி ஜானி
நிர்வாக இயக்குனர்
DIN : 02712125

இடம்: சென்னை
தேதி: 24.08.2022

CHANGE OF NAME

I, Dillip Kumar Majhi S/O Madhusudan Majhi, R/o 32/4, East Colony ICF, Chennai, Tamil Nadu- 600038. I have changed the name of my minor daughter Shweta Majhi aged about and She shall hereafter be known as Disa Shweta Majhi

ENROLMENT NOTICE

After 10 days of the publication of this notice and within three months thereafter, I. **G. MANOJ, S/o D GOUNASEGARANE ,** aged 27 years, Permanently residing at 10/a, Thirukanchi Street, Kanuvapet, Villianur, Pondycherry-605110, intend having my enrolment as an Advocate moved before the Bar Council of Tamilnadu and Pondicherry, Bar Council Buildings, High Court Campus, Chennai-104.

Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 Days.

- G.MANOJ

பெயர் மாற்றம்

Ansh Deepak Kumar, பிறந்த தேதி: 01.06.2008, எண்.1, டீமெலோஸ் சாலை, ரெயின்போ சித்தார்ச்சல் அபார்ட்மெண்ட்ஸ், சூளை, சென்னை - 600 112 என்ற முகவரியில் வசிக்கும் எனது மகன் இனி ANSH DEEPAK JAIN என்று அழைக்கப்படுகிறார்.

DEEPAK KUMAR
(தந்தை)

IN THE XIV ASSISTANT CITY CIVIL COURT AT CHENNAI
I.A. No. 3 of 2022
in
O.S. No.211 of 2016

S. VENKATESAN
S/o. Saminathan
No.26, AnaikkaraKonar Street
Seven Wells, Chennai-600 001
...Petitioner/Defendant

Vs.

1. SHAHUL HAMEED
S/o. KhaderOli
No.48, NattuPillaiyarKoil Street
Sowcarpet, Chennai-600 001
2. KAMAL ROWTHER
S/o. K.N. Rowther
No.48, NattuPillaiyarKoil Street
Sowcarpet, Chennai-600 001
...Respondents/Plaintiffs

In the above I.A. No. 3 of 2022, the Hon'ble XIV Assistant City Civil Court at Chennai has directed us to take notice on SHAHUL HAMEED, S/o.KhaderOli, the 1st Respondent/1st Plaintiff and KAMAL ROWTHER S/o. K.N. Rowther, the 2nd Respondent/2nd Plaintiff both at, No.48, Nattu Pillaiyar Koil Street, Sowcarpet, Chennai-600 001, in the above case which is set for hearing on 05.09.2022 before the Hon'ble Court.

Kindly take notice that the above case is set for hearing on 05.09.2022 about 10.15 a.m on which day you are hereby required to appear before the Hon'ble XIV Assistant City Civil Court at Chennai failing which the above matter would be heard in your absence and will be decided on merits.

B. JANAKIRAM
Counsel for the Petitioner/ Defendant

அழகேந்திரன் நிதி லிமிடெட்

Alagendra's Since 1960

பதிவு அலுவலகம்: நெ.95, நியூ ஆவடி சாலை, கீழ்பாக்கம், சென்னை – 600 010
CIN:U65991TN1992PLC023989
Website: www.alagendrannidhi.net E-mail id: info@alagendrannidhi.net

பங்குதாரர்களுக்கு அறிவிப்பு

கீழ்க்கண்ட அலுவல்களை செயல்படுத்த அழகேந்திரன் நிதி லிமிடெட் பங்குதாரர்களின் 30வது வருடாந்திர பொதுக்கூட்டம் 24 செப்டம்பர், 2022 அன்று காலை 10.35 மணிக்கு எண். 95, நியூ ஆவடி சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை – 600 010ல் மற்றும் காணொலி காட்சி மூலமும் நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது (மற்றவர்களுக்கு உள்நுழைவு பற்றிய விவரங்கள் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும், கூட்டத்துக்கு 10 நாட் களுக்கு முன்பு உங்கள் கிளைகளில் இருந்து சேகரிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்).

சாதாரண அலுவல்:

1. 31 மார்ச் 2022 அன்று தணிக்கையான லாப மற்றும் நஷ்ட கணக்கு, நிதிநிலை அறிக்கை மற்றும் இயக்குனர்கள், தணிக்கையாளர்களின் அறிக்கைகளை பெற்று ஏற்றுக் கொள்ளல்.

   "31.03.2022ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் தணிக்கையான நிதிநிலை அறிக்கைகள், குழு மற்றும் தணிக்கையாளர்களின் அறிக்கையை பரிசீலித்து ஏற்றுக் கொள்வது என தீர்மானிக்கப்பட்டது"

2. டிவிடெண்ட் அறிவித்தல்

   "ஒரு ஈக்விட்டி பங்கிற்கு ரூ.1.50 இறுதி ஈவுத்தொகை, அதாவது செலுத்தப்பட்ட சம பங்கு மூலதனத்தின் மீது 15%ஐ குழு பரிந்துரைத்துள்ளது என முடிவு செய்யப்பட்டு, இதன் மூலம் அறிவிப்பது என தீர்மானிக்கப்பட்டது.''

3. தணிக்கையாளர்களை நியமனம் செய்தல்

   பொருந்தும் எனும்பட்சத்தில் கீழ்க்கண்ட தீர்மானத்தை மாற்றத்துடனோ அல்லது மாற்றமில்லாமலோ சாதாரண தீர்மானமாக நிறைவேற்றல்.

   ''ஓய்வு பெறும் தணிக்கையாளர் M/s P.T.பொன்னையா & கோ., சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட் அவர்களின் இடத்தில் M/s ராகேஷ் & கோ., சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட், (பதிவு எண். 017690S) புதிய எண்.120, பழைய எண்.34/3 பாளையகார தெரு, அயனாவரம், சென்னை 600 023 அவர்கள் தணிக்கையாளராக நியமிக்கப்படுகிறார். அவர் 2027 காலண்டர் ஆண்டில் நடைபெறும் 35வது வருடாந்திர பொதுக் கூட்டம் முடியும் வரை ஐந்தாண்டுகள் பதவியில் இருப்பதற்கும், இயக்குநர்கள் குழு மற்றும் தணிக்கையாளர்கள் இடையே பரஸ்பரம் ஒப்புக்கொள்ளப்படும் விகிதத்தில் ஊதியம் வழங்குவது என தீர்மானிக்கப்பட்டது.''

   குறிப்பு: நிறுவனத்தின் ஓய்வுபெறும் தணிக்கையாளர்களான தற்போதைய சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள் M/s P.T. பொன்னையா & கோ., நிறுவனச் சட்டம், 2013, பிரிவு 139 மற்றும் 141 விதிகளின்படி, மறு நியமனத்திற்குத் தகுதியற்றவர்கள் ஆவர்கள்.

4. சுழற்சி முறையில் ஓய்வு பெறும் திரு. A. ராஜ்குமார் (DIN: 00933724) அவர்களின் இடத்தில் ஒரு இயக்குனரை நியமனம் செய்தல். மீண்டும் தேர்ந்தெடுக்க அவர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

   பொருந்தும் எனும்பட்சத்தில் கீழ்க்கண்ட தீர்மானத்தை மாற்றத்துடனோ அல்லது மாற்றமில்லாமலோ சாதாரண தீர்மானமாக நிறைவேற்றல்.

   "சுழற்சி முறையில் ஓய்வுபெற்ற ஸ்ரீ ஏ. ராஜ்குமார் (DIN:00933724) அவர்கள் மறுநியமனம் செய்வதற்குத் தகுதியுடையவராக இருப்பதனால், நிறுவனத்தின் இயக்குநராக மீண்டும் மறுநியமனம் செய்வது என தீர்மானிக்கப்பட்டது.''

சிறப்பு அலுவல்:

5. நிறுவனத்தின் முழு நேர இயக்குநராக ஸ்ரீ ஏ. ராஜ்குமார் அவர்களை நியமிப்பதற்கு ஒப்புதல் அளித்தல்

   பொருந்தும் எனும்பட்சத்தில் கீழ்க்கண்ட தீர்மானத்தை மாற்றத்துடனோ அல்லது மாற்றமில்லாமலோ சிறப்பு தீர்மானமாக நிறைவேற்றல்.

   ''நிறுவனங்கள் சட்டம் 2013 பிரிவுகள் 196, 197, 203 மற்றும் அட்டவணை V மற்றும் பிற பொருந்தக்கூடிய விதிகள் (ஏதேனும் இருந்தால் அதன்படி மற்றும் நிறுவனங்கள் (நிர்வாகப் பணியாளர் நியமனம் மற்றும் ஊதியம்) விதிகள் 2014 (ஏதேனும் சட்டப்பூர்வ மாற்றம்(கள்) அல்லது தற்போதைக்கு நடைமுறையில் உள்ளவற்றை மீண்டும் செயல்படுத்துதல் உட்பட)ன்படி ஸ்ரீ ஏ. ராஜ்குமார் (DIN:00933724) அவர்களை நிறுவனத்தின் முழு நேர இயக்குனராக 24.09.2022 முதல் 23.09.2027 வரையிலான ஐந்தாண்டு காலத்திற்கு நியமனம் செய்து நிறுவனங்கள் சட்டம், 2013 அட்டவணை V இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வரம்புகளை மீறாமல் அல்லது ஏதேனும் சட்டப்பூர்வ மாற்றம்(கள்) அல்லது தற்போதைக்கு நடைமுறையில் உள்ளவற்றை மீண்டும் செயல்படுத்துதலின்படி ஆண்டுக்கு ரூ.24,00,000/-க்கு மிகாமல் ஊதியம் வழங்க உறுப்பினர்களின் ஒப்புதல் பெற்று வழங்குவது என தீர்மானிக்கப்பட்டது.''

   வருங்கால வைப்பு நிதிக்கு மாதத்திற்கு ரூ. 1800/- மற்றும் அவர் கலந்து கொள்ளும் ஒரு கூட்டத்திற்கு அமர்வு கட்டணம் ரூ. 10,000/-ஐ உறுப்பினர்களின் ஒப்புதல் பெற்று வழங்குவது என தீர்மானிக்கப்பட்டது.

   நிறுவனங்கள் சட்டம், 2013 பிரிவு Vன் பகுதி IIல் உள்ள வரம்பைத் தாண்டாமல் குறைந்தபட்ச ஊதியம் என அவ்வப்போது அரசாங்கத்தால் அறிவிக்கப்படும் மற்ற வரம்புகளுக்கு மிகாமல் மேலும், லாபம் இல்லாமல் இருந்தால் அல்லது போதுமான லாபம் இருலாமல் இருந்தாலோ செயல் இயக்குனர் திரு. ஏ.ராஜ்குமார் அவர்களுக்கு ஊதியம் வழங்குவது என தீர்மானிக்கப்பட்டது.

   மேலும், நிறுவனத்தின் இயக்குநர்களில் எவரேனும் ஒருவர், இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காக, அத்தகைய செயல்கள் மற்றும் விஷயங்கள் அனைத்தையும் அதன் முழு விருப்பப்படி, தேவையானதாகக் கருதும் வகையில் செய்ய, இதன்மூலம் அதிகாரம் பெற்றிருக்க வேண்டும். சரியான அல்லது விரும்பத்தக்கது மற்றும் இது சம்பந்தமாக எழக்கூடிய ஏதேனும் கேள்விகள், சிரமங்கள் அல்லது சந்தேகங்களைத் தீர்ப்பதற்கும் மேலும் தேவையான அனைத்து ஆவணங்கள், விண்ணப்பங்கள், ரிட்டர்ன்கள் மற்றும் எழுத்துகளை தேவையான, சரியான, விரும்பத்தக்க மற்றும் பொருத்தமானதாகக் கருதப்படும் என முடிவெடுக்கப்பட்டது.

6. நிறுவனத்தின் இயக்குநரான திரு. ஆர் அழகேந்திரன் (DIN:00020584) அவர்களின் ஊதியத்தை அங்கீகரித்தல்.

   பொருந்தும் எனும்பட்சத்தில் கீழ்க்கண்ட தீர்மானத்தை மாற்றத்துடனோ அல்லது மாற்றமில்லாமலோ சிறப்பு தீர்மானமாக நிறைவேற்றல்.

   ''நிறுவனங்கள் சட்டம் 2013 (''சட்டம்'') பிரிவுகள் 196, 197, 198, 203 மற்றும் அட்டவணை V மற்றும் பிற பொருந்தக்கூடிய விதிகள் ஏதேனும் இருந்தால் அதன்படி மற்றும் நிறுவனங்கள் (நிர்வாகப் பணியாளர் நியமனம் மற்றும் ஊதியம்) விதிகள் மற்றும் ஆர்டிகல்ஸ் ஆப் அசோசியேஷன் விதிகளுக்கு இணங்க அவ்வப்போது, பொருந்தக்கூடிய சட்டத்தின் கீழ் மற்றும் அறிவிப்புடன் இணைக்கப்பட்ட விளக்க அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நிறுவனத்தின் இயக்குனர் திரு.ஆர் அழகேந்திரனுக்கு (DIN:00020584) ஆண்டுக்கு 12,00,000 ரூபாய்க்கு மிகாமல் ஒரு தொகையை நிர்வாக ஊதியம் வழங்குவதற்கு நிறுவனத்தின் ஒப்புதல் மற்றும் இதன் மூலம் வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது.

   திரு. ஆர் அழகேந்திரன் (DIN:00020584) அவர்களின் பதவி காலத்தில் நிறுவனத்தின் ஏதேனும் நிதியாண்டில் நஷ்டம் அல்லது லாப பற்றாக்குறை ஏற்பட்டால், சட்ட அட்டவணை V மற்றும் பிரிவு 197ன் விதிகள் மற்றும் பொருந்தக்கூடிய பிற விதிகளின்படி நிறுவனத்தின் உறுப்பினர்களின் ஒப்புதல் பெற்று நிறுவனத்தின் இயக்குநர் திரு. ஆர் அழகேந்திரன் (DIN:00020584) அவர்களுக்கு ஊதியம் வழங்குவது என தீர்மானிக்கப்பட்டது.

   மேலும், நிறுவனத்தின் இயக்குநர்களில் யாரேனும் ஒருவர், ஏதேனும் கேள்விகள், சிரமம் அல்லது சந்தேகங்களைத் தீர்ப்பதற்கும், அத்தகைய செயல்கள், மற்றும் விஷயங்களைச் செய்வதற்கும், தேவையான அனைத்து ஆவணங்கள் அல்லது எழுத்துகளிலும் கையொப்பமிடுவதற்கும், சரியான முறையில் செயல்படுத்துவதற்கும் இதன்மூலம் அதிகாரம் பெற்றுள்ளார். அல்லது இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நோக்கத்திற்காகவும் அது தொடர்பான அல்லது தற்செயலான விஷயங்களுக்காகவும் பொருத்தமானது என தீர்மானிக்கப்பட்டது.

குழு உத்தரவுப்படி

இடம்: சென்னை
தேதி: 22.07.2022

R. அழகேந்திரன்
தலைவர்
DIN : 00020584

குறிப்புகள்:

1. கோவிட்-19 தொற்று நோயின் இரண்டாவது அலையை கருத்தில் கொண்டு, கார்ப்பரேட் விவகார அமைச்சகம் அதன் பொது சுற்றறிக்கை எண் 39/2020 மற